192

195

1924

ஓம் தத். ஸத் ஆஞ்சநேயர்துணை

ஸ்ரீவிலக்ஷணானந்த குருசகாயம்.

1924ம் வருஷம் ஜூலைமீ 16ௗ

ரக்தாக்ஷி வருஷம் ஆடிமீ 1ௗ

திருச்சி காவேரி வெள்ளச்சிந்து.

10 OCT 19

திருச்சி புகழ்கவி டி. எம். ஜன்னபா சாய்பு

அவர்கள் இயற்றியதை

வில்லாபுரம் ஸ்ரீ விலக்ஷணானந்தவிலாஸ்

பி. கே. நாராயணன் அன் கோ.,

புரோப்ரைட்டர்

பொன்னுசாமிபிள்ளையால்

ணிய விலாஸ பிரஸில்

க்கப்பட்டது.

1924 (அணா 1

O-,1MJS,T
N24.
183466

சீங்கார தெம்மாங்கு

1. பரிதாபம் பரிதாபம்

பார்க்கலாச்சுதே — வெள்ளம்வந்த பரி

2. அரிவுள்ள மாமயிலே — அலையடித்து வெள்ளமது
சரியான ரக்தாக்ஷி சமய மாடி மாசத்திலே பரி

3. மைசூர் மலையாளத்தில் — மழையதிக மானதினால்
தையலரே சொல்கிறேன் கேள் தண்ணீவந்த விபரமது பரி

4. மாவேக மனவேகமாய் — மாமயிலே வெள்ளம் வந்து
காவேரி கொள்ளிடமும் கரை புரண்டு போகுதேடி பரி

5. ஆற்றங்கரை வோரத்திலே — அடுக்கடுக்கா மெத்தை வீடு
நேற்று வந்த வெள்ளத்திலே நீஞ்சுறதை பாருங்கடி பரி

6. தண்ணீர் பயமில்லாமல் — தைரியமாய் வீடுகட்டி
கண்ணீர் விட்டழுதல்லவோ கதருவதை பாருங்களே பரி

7. சிந்தாமணி வீடுகடை—சிறப்புடனே வாழ்ந்திருக்க
வந்தபெருவெள்ளத்தாலே அந்தரமாய் நிற்கலாச்சே   பரி

8. பட்டு பட்டாடையெல்லாம்—பார்த்து யெடுக்காமலே
கட்டிருந்த வேஷ்டியோடு கண்கலங்கி யோடுவது   பரி

9. கோர்திவருகுதேடி குணமயிலே—வேகத்தோடு
போலீசு லயனுக்குள்ளே பூந்ததடி வெள்ளம்வந்து பரி

10. சீக்கிரம் வெள்ளம்வற—சிந்தாமணி ஜனங்களிலே
பாக்கி சிலர் வீட்டில் சிக்கிபதரி தவிக்கிறது   பரி

11. பள்ளர் பறையர் வீடு—பள்ளமடி சிந்தாமணி
வெள்ளம் வந்து பூந்ததினால் விசனமடைகிறாரே   பரி

12. திருச்சி ஜில்லாவைச்சேர்ந்ததிவ்ய—யமான ஸ்ரீரங்கமாம்
திருவானைக்காவிலும் திறந்திடுதடி வெள்ளம் வந்து   பரி

13. இம்மாதிரி பெருத்த வெள்ளம் யிதுவரையில் வந்ததில்லை
கம்பரஷம் பேட்டைவூரு—காணுமடி கண்மணியே பரி

14 காடுயறஞ் செடிகள் கனத்த வெள்ளம் வந்ததினால்
ஆடு மாடுகளெல்லாம்—அடித்து ஆற்றில் வருகிறது பரி

15. உள்ளங்கலங்குதடி வூரிலுள்ள பேர்களுக்கு
கொள்ளிடம் வுடைந்து தென்று—கூக்குறலைபாருங்கடி பரி

16. முக்கம்பு மேல் கேட்டில் மூளிக்கிதங்கே சரக்கு வண்டி
இக்கறையில் வியாபாரிகள்—யேங்கித்தவிக்கிரது பரி

17. குடிக்கஜல மில்லாமல் கோட்டை ஜனங்களெல்லாம்
விடியமற்றும் குடத்தை தூக்கி விசனத்தோடுபோகுரது பரி

18. ஆடிமாதம் முதல் தேதியில் ஆறம்பித்த வெள்ளமதை
வேடிக்கை பார்ப்பதற்கு வெகு ஜனங்கள் வருகிரது பரி

19. ஊருமுழுகுமென்று உத்தமரும் கலெக்டர் துறை
பாருங்கடி வோடிவந்து—பட்சமுடன் வுழைக்கிறது பரி

20. திருச்சி ஜில்லா மேஸ்த்ரி ரேட்டாம்—திவ்வியமான அய்யரவர்
கருணையுடன் யேழைகளை காக்க வுழைக்கிராறே பரி

21. போலீஸ் யினிஸ் பெக்ட்டராம—புண்ணியவான் செய்த நன்மை
வாலிபமுள்ளவளே வகையுடனே சொல்கிறேன் கேள் பரி

22. திருநெல்வேலி ஜில்லாவிலே திறண்டுவெள்ளம் வந்ததிலே
கருணைவைத்து யேழைகளை காப்பாற்றி வந்தவராம் பரி

23. சுத்தமனதுடையோர் முத்தையா முதலியாரும்
உத்தமர் வெள்ளத்திலே வுழைக்கிறதை பாருங்கடி பரி

24. சீமானென்று பேர்விளங்கும்—சிரந்த கந்தசாமி சேர்வை
ஆமா பெண்ணே யேழைகட்கு அன்னம்படைக்கிறது பரி

25. தண்ணீர் அதிகமாச்சு ஜலமே வெள்ளத்தினால்
கண்ணீர் விட்டழுகுராது கண்ருவியை பாற்கணுமேயா பரி

26. அன்பான சகோதரரே அனியாயமாய் வெள்ளம் வற
அன்பன் டி. எம். ஜன்னபா அதிசயத்தைபாடலானேன் பரி

27. அந்தமுள்ள திருச்சியிலே—வந்தபெரும் வெள்ளத்திற்கு
ஹிந்துமுஸ்லீம் சகோதரரே யிறையவனை மன்ராடுங்க பரி

கூடிய சீக்கிரத்தில் தென் இந்யா ஜில் திருடன் பாட்டு
புஸ்தகம் முதல் பாகம் இண்டாம் பாகம் வெளி வரும்.

வேறு தெம்மாங்கு

தென்னிந்தியாதேசம்—மழைசசேதமதால் மோசம
பொன்னுச்சாமி சொன்னேன்—பொறுமையுடன் கேட்பீர்

தந்திதபால்கள் போச்சு சர்க்காருக்கு பயமுண்டாச்சு
இந்திய சுதேசமித்திரன் இடவழியில் நின்றுபோச்சுதே

தஞ்சாவூர் நாகபட்டணம் தான்றிகுடி நீலகிரி
அஞ்சுநாள் பெய்தமழை அங்கேஎல்லாம்உடைப்புண்டாச்சு (தே

நாகூரு நாகபட்டணம் நலமான புதுச்சேரி
யேகமாய் மழைபொழிந்து யெங்கும்உடைபபுண்டாச்சு (தே

பிரோடு தாராபுரம் யேகமாக வெள்ளமதால்
வேரோடு மரங்கிளைகள் வீடுகளும் விழுந்துபோச்சு (தே

கொள்ளடம் காவேரி கொப்டளித்து தண்ணீர்பொங்கி
இல்லடம் மாடாடுகள்யேகமாக மாண்டு போச்சு (தேன்)

மலைநாடு தாம்பிரவர்ணிமா பெரிய தென்காசி
அலைமோதி வெள்ளமதால் அடங்கலுமே சேதமாச்சு (தேன்]

கொல்லத்து ரயில் பாதைதுணைபாக இருந்ததுவும
எள்ளத்தனை சேதமன்றி இடிந்து விழுந்துபோச்சு [தேன்]

இலோன்போற போட்மெயில்தான் செல்லமார்க்க மில்லாமே
நலமுடனே கூட ஊரில் நல்லகப்பல் மார்க்கமதாய் [தெ)

கப்பலில் பாசஞ்சரை கனமுடனே தானேற்றி
தப்பாமல் நாகபட்டணம் தான்விடுத்து போகிறதாம் [தெ)

நாகபட்டணமிருந்து நலமுடனே போட்மெயிலும்
வேகமுடன் கொழும்புக்கேகும்விநோதமதைஎன்னசொல்வேன்

பாண்டு மடிந்து போனமகாஜனத்தின் துகைபதனை
மீண்டு எடுத்துரைப்பேன்வில்வபுரம்பொன்னுச்சாமி (தெ

பட்டணப் பொடிக்கும் பலவித வாசனைப்புகையிலைக்கும் புகழ் பெற்ற இடம் எது ?

S. M. சங்கரன் அன்கோ.
கோவில்பட்டி S. I. R